சுருக்கம்

தொழில்நுட்பக் கல்வி – தொழில்நுட்பப் பல்கலைக்கழகங்களின் பாடத்திட்டம், மாணவர் சேர்க்கைக்கான கல்வித் தகுதி மற்றும் வழங்கும் பட்டம் ஆகியவை ஒரே சீராக அமைவது குறித்து முடிவெடுத்தல் – தொழில்நுட்பப் பல்கலை கழங்களின் துணைவேந்தர்களை கொண்ட ஒருங்கிணைப்பு குழு அமைத்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

உயர்கல்வி (ஜே2) துறை

அரசாணை (நிலை) எண்.140 நாள். 2.5.2008.

சித்திரை 20,
திருவள்ளுவர் ஆண்டு 2039.

1. அரசு கடிதம் எண்.24279/ஐ1/2007, உயர்கல்வித்துறை, நாள்.20.11.2007.
2. தொழில்நுட்பக் கல்வி ஆணையரின் கடிதம் எண்.47917/ஜே1/2007, நாள் 26.11.2007.

------

ஆணை:

பொறியியல் கல்லூரிகளில் இளநிலை மற்றும் முதுநிலை மாணவர் சேர்க்கைக்கான ஒப்புதல் அளிக்கும் கருத்துருக்களை பரிசீலிக்கும்போது, சில பட்டப் படிப்புகளுக்கு சென்னை, அண்ணா பல்கலைக்கழகம் மற்றும் கோயம்புத்தூர் அண்ணா பல்கலைக்கழகம் ஆகியவை நிர்ணயித்துள்ள கல்வித் தகுதிகள் வெவ்வேறானவையாக இருந்ததாகவும், இது தொடர்பாக ஒரு சீரான நடைமுறையை கடைப்பிடிக்கும்பொருட்டு 12.11.2007 அன்று நடைபெற்ற கூட்டத்தில் அனைத்து தொழில்நுட்பப் பல்கலைக்கழகங்களின் துணைவேந்தர்கள் அடங்கிய ஓர் ஒருங்கிணைப்பு குழு அமைக்க முடிவெடுக்கப்பட்டு அதற்கான கருத்துருவை அனுப்புமாறு தொழில்நுட்பக் கல்வி ஆணையரிடம் கோரப்பட்டதன் அடிப்படையில் தொழில்நுட்பக் கல்வி ஆணையர் மேலே இரண்டில் படிக்கப்பட்ட கடிதத்தில் தக்க கருத்துருவினை அனுப்பி அதற்கான ஆணையை வழங்கிடுமாறு அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

2. தொழில்நுட்பக் கல்வி ஆணையரின் கருத்துருவினை கவனமுடன் பரிசீலனை செய்த அரசு அதனை ஏற்றுக்கொள்ள முடிவு செய்து தமிழ்நாட்டிலுள்ள அனைத்து தொழில்நுட்பப் பல்கலைக்கழகங்களிலும் ஒரே சீரான நடைமுறையை கடைபிடிப்பது குறித்து விவாதித்து முடிவெடுக்க கீழ்க்கண்ட உறுப்பினர்களைக் கொண்ட ஒருங்கிணைப்பு குழு ஒன்றினை அமைத்து ஆணையிடுகிறது:-

| | | |
|---|---|---|
| 1) | அரசு செயலாளர்,<br>உயர்கல்வித்துறை, சென்னை–9. | அமைப்பாளர் |
| 2) | துணைவேந்தர்,<br>அண்ணா பல்கலைக்கழகம், சென்னை–25 | உறுப்பினர் |
| 3) | துணைவேந்தர்,<br>அண்ணா பல்கலைக்கழகம், திருச்சிராப்பள்ளி | உறுப்பினர் |

| | | |
|---|---|---|
| 4) | துணைவேந்தர்,<br>அண்ணா பல்கலைக்கழகம், திருநெல்வேலி | உறுப்பினர் |
| 5) | துணைவேந்தர்,<br>அண்ணா பல்கலைக்கழகம், கோயம்புத்தூர் | உறுப்பினர் |
| 6) | தொழில்நுட்பக் கல்வி ஆணையர்,<br>தொழில்நுட்பக் கல்வி இயக்ககம், சென்னை–25. | உறுப்பினர் –<br>செயலர் |

(அளுநரின் ஆணைப்படி)

க.கணேசன்,
அரசு செயலாளர்.

பெறுநர்
அரசு செயலாளர், உயர்கல்வித்துறை, சென்னை–9.
தொழில்நுட்பக் கல்வி ஆணையர், சென்னை–25.
துணைவேந்தர், அண்ணா பல்கலைக்கழகம், சென்னை/திருச்சிராப்பள்ளி/
கோயம்புத்தூர்/திருநெல்வேலி.
நகல்
மாண்புமிகு உயர்கல்வித்துறை அமைச்சர் அவர்களின் முதுநிலை நேர்முக உதவியாளர்,
சென்னை–9.
இ.கோ/உதிரி.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்.